2002 அக்டோபர் 30]
76—

மிளகுக் கன்றுகள்

***15221—திரு. டி. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், சீறோபாயிண்ட் பகுதியிலுள்ள நல்லமிளகுச் செடிகளை உற்பத்தி செய்யும் பண்ணையில் கடந்த 1999-2000, 2000-2001 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன?

(ஆ) நல்லமிளகுச் செடிகளுக்கு வரும் நோயைத் தடுக்க வேளாண்மைத் துறையிலிருந்து எந்த வகையான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், சீறோபாயிண்ட் பகுதியிலுள்ள நல்லமிளகுச் செடிகளை உற்பத்தி செய்யும் பண்ணையில் 1999-2000 ஆம் ஆண்டில் 3.12 இலட்சம் கன்றுகளும், 2000-2001 ஆம் ஆண்டில் 3.00 இலட்சம் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. நல்லமிளகுச் செடிகளுக்கு வரும் நோயைத் தடுக்க தோட்டக்கலைத் துறையினரால், தாமிர ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லமிளகு பயிரிடப்படுகிற அந்தப் பண்ணையில் தற்போது அந்தச் செடிகளுக்கு சில நோய்கள் வந்து அவை பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தரமான செடிகள் அங்கே வளர்க்கப்பட்டு, அவற்றை மேலும் அபிவிருத்திப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிளகுக் கன்றுகளைத் தாக்கும் நோய்களுக்கு காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்து விநியோகிக்கப்படுகிறது. அங்கே இருக்கிற விரிவாக்க அலுவலர்களிடம் கேட்டால் அவர்கள் அதைப் பார்த்துத் தேவையான மருந்துகளை அளிப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற மிளகு என்ன விலைக்குத் தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது? பொதுவாக, நமது தமிழகத்தில் பல்வேறு வனப் பகுதிகளிலே அரசுக்குச் சொந்தமான நிலங்கள் தரிசாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளில் விலையுயர்ந்த ஜாதிக்காய், கிராம்பு போன்ற செடிகளையும் பயிரிட்டு அதன்மூலம் அரசுக்கும் வருமானத்தை ஈட்டித் தரும் தரமான வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா? இந்த ஆண்டே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம்பு, ஜாதிக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் தட்பவெப்ப நிலைக்கேற்ப பயிரிடப்படுகிற பயிர்களாகும். இப்படி பயிரிடப்படுகிற இந்தப் பயிர்கள் தரமாகப் பயிரிடப்பட வேண்டுமென்பதற்காக அரசு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உலகத் தரத்தோடு போட்டியிடுகிற அளவுக்கு நம்முடைய விவசாயிகள் தரமான கன்றுகளை நட வேண்டுமென்பதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. அ. பாப்பா சுந்தரம். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

77—

வைப்பீட்டுத் தொகை

***7334—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—